Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road,
Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 276 | உள்ளூர் - 04.10.2026 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 276 | வெளியூர் - 05.10.2026 | திங்கட்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

**வயது 40-க்கு மேல் அதிர்ஷ்டம்!**

**சென்னை பெட்ரோலிய நிறுவனத்தில் காலியிடங்கள்!**

**இடைத்தேர்தல்: ஓய்ந்தது பிரசாரம்..!**

**சிங்கீதம் சீனிவாச ராவ் மறைவு!**

# பிரேசிலில் அதிபர் தேர்தல்!



பிரேசிலா, அக். 04–

பிரேசில் நாட்டில் அதிபர் தேர்தலுக்கான வாக்கெடுப்பு நடைபெற உள்ளது.

தென் அமெரிக்காவில் அமைந்துள்ள நாடு பிரேசில். இந்நாட்டின் அதிபராக லுலா டி சில்வா செயல்பட்டு வருகிறார்.

இந்நிலையில், பிரேசில் நாட்டில் இன்று அதிபர் தேர்தல் நடைபெற உள்ளது. அதிபர் தேர்தலில் தற்போதைய அதிபர் டி சில்வா, முன்னாள் அதிபர் ஜெய்ர் போல்சனேரோவின் மகன் பிளவியோ நண்டெஸ் போல்சனேரோ உள்பட 12 வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர். அதிபர் தேர்தலில் வெற்றிபெற வேட்பாளர் 50 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளை பெறவேண்டும். எந்த வேட்பாளரும் 50 சதவீதத்திற்குமேல் வாக்குகளை பெறாத பட்சத்தில் அதிக வாக்குகளை பெறும் முதல் 2 வேட்பாளர்கள் மீண்டும் தேர்தலை சந்திக்க வேண்டும். அந்த தேர்தல் வரும் 25ம் தேதி நடைபெறும்.

அதேவேளை, அதிபர் தேர்தலுடன் சேர்த்து இன்று மாகாண கவர்னர்கள், மாகாண மந்திரிகளுக்கான தேர்தலும் நடைபெற உள்ளது. சுமார் 16 கோடி வாக்காளர்கள் இன்று நடைபெறும் தேர்தலில் வாக்களிக்க தகுதிபெற்றவர்கள் ஆவர்.

# 10 கோடி பீப்பாய் கச்சா எண்ணெய் உலக சந்தைக்கு விடுவிப்பு: ஜி7 நாடுகள் ஒப்புதல் - பெட்ரோல், டீசல் விலை குறைய வாய்ப்பு!




பாரீஸ், அக். 04–

அவசர கால இருப்புப் பெட்டகங்களில் இருந்து 10 கோடி பீப்பாய் கச்சா எண்ணெய்யை உலக சந்தைக்கு வெளியிட ஜி7 நாடுகள் கூட்டாக ஒப்புதல் அளித்துள்ளன. இதன் மூலம் உலக சந்தையில் கச்சா எண்ணெய் தட்டுப்பாடு குறைந்து, இந்தியாவிலும் பெட்ரோல், டீசல் விலைகள் கட்டுக்குள் வர வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கு இடையே கடந்த 8 மாதங்களாக நீடித்து வரும் போர் சூழல் காரணமாக, சர்வதேச கச்சா எண்ணெய் வினியோக சங்கிலி கடுமையாக பாதிக்கப்பட் டுள்ளது. குறிப்பாக, மத்திய கிழக்கின் முக்கிய கடல் வழிப் பாதையான ஹார்முஸ் நீரிணையில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து தடைகளால் கச்சா எண்ணெய் மற்றும் டீசல் விலை உலகளவில் புதிய உச்சத்தைத் தொட்டது.

இந்த சூழலில், ஐரோப்பிய நாடுகள் தங்களின் இருப்பில் உள்ள கச்சா எண்ணெய்யை சர்வதேச சந்தைக்கு திறந்துவிடத் தவறினால், அமெரிக்காவில் இருந்து டீசல் ஏற்றுமதி செய்ய தடை விதிக்கப்படும் என அமெரிக்க அதிபர் டிரம்ப் எச்சரிக்கை விடுத்தார்.

பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற ஐரோப்பா நாடுகள் தங்களின் பாதிக்கும் மேற்பட்ட டீசலுக்கு அமெரிக்காவை மட்டுமே நம்பியிருப்பதால், டிரம்ப் அறிவித்த தடை உடனடியாக அந்த நாடுகளின் எரிபொருள் சந்தையில் பெரும் பீதியை ஏற்படுத்தியது.

கச்சா எண்ணெயை டீசலாக மாற்றுவதற்கான கூடுதல் சுத்திகரிப்புக் கட்டணம் சர்வதேச சந்தையில் ஒரு பீப்பாய்க்கு முன்னெப்போதும் இல்லாத வகையில் ரூ.9,600 (100 அமெரிக்க டாலர்) எகிறியது. இந்த தட்டுப்பாட்டு பயத்தால், ஐரோப்பிய நாடுகளில் உள்ள பெட்ரோல் பங்குகளில் டீசல் விலை ஒரே வாரத்தில் 40 சதவீதம் வரை அசுர வேகத்தில் உயர்ந்தது.

சர்வதேச அளவில் வரலாறு காணாத வகையில் உயர்ந்து வரும் எரிபொருள் விலையைக் கட்டுப்படுத்தும் நோக்கில், தங்களின் அவசர கால இருப்புப் பெட்டகங்களில் இருந்து 10 கோடி பீப்பாய் கச்சா எண்ணெயை உலகச் சந்தைக்கு வெளியிட ஜி7 நாடுகள் கூட்டாக ஒப்புதல் அளித்துள்ளன.

பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் தலைமையில் நடை பெற்ற ஜி7 நாடுகளின் அவசரக் காணொலி மாநாட்டில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் முக்கிய அம்சங்களாக, இந்த அவசர கால கச்சா எண்ணெய் வெளியீடு உடனடியாக தொடங்கி, அடுத்த 4 மாதங்களுக்கு தொடர்ந்து நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தட்டுப்பாட்டைக் குறைக்க, முதற்கட்டமாக முதல் 20 நாட்களிலேயே ஒரு பெரிய பகுதி சந்தைக்கு கொண்டுவரப்படும். பாரீஸ் நகரை தலைமையிடமாகக் கொண்ட சர்வதேச எரிசக்தி முகமை இந்த ஒட்டுமொத்த பங்கீட்டையும் உலகளவில் கண்காணித்து வழிநடத்தும்.

இந்த அதிரடி வெளியீட்டின் மூலம் உலகச் சந்தையில் கச்சா எண்ணெய் தட்டுப்பாடு குறைந்து, இந்தியாவிலும் பெட்ரோல், டீசல் விலைகள் கட்டுக்குள் வர வாய்ப்புள்ளதாகப் பொருளாதார நிபுணர்கள் கருதுகின்றனர். இந்த நடவடிக்கை எரிபொருள் சந்தையில் நிலவும் தற்போதைய பதற்றத்தைத் தணிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பரந்தூருக்கு பதிலாக

# விரிவாகும் விமான நிலையம்! குறிவைக்கப்பட்ட 3 பகுதிகள்!

## 217 ஏக்கர் கையகப்படுத்தல்!!




சென்னை, அக், 04–

விஜய் தலைமையிலான அரசு பரந்தூரில் சென்னையின் 2வது விமான நிலையம் அமைக்கும் திட்டத்தைக் கைவிட்டுள்ள நிலையில் தற்போது பயன்பாட்டில் இருக்கும் மீனம்பாக்கம் விமான நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டத்தில் கவனம் செலுத்தி வருகிறது.

இதற்காக மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு அருகில் இருக்கும் மணப்பாக்கம், கொளப்பாக்கம், கவுல் பஜார் ஆகிய 3 கிராமத்தில் இருந்து சுமார் 217 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தும் பணிகளைத் தமிழக அரசு துவங்கியுள்ளது.

திமுக ஆட்சியில் இருந்த போது 2023ஆம் ஆண்டு பரந்தூரில் சுமார் 5,600 ஏக்கர் நிலத்தில் புதிய விமான நிலையம் அமைக்கும் திட்டம் அமைக்கும் மாபெரும் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இந்த விமான நிலைய திட்டத்தில் பயணிகள் போக்குவரத்திற்காகவும், சரக்கு போக்குவரத்திற்காகவும் பெரும் கட்டமைப்புகள் திட்டமிடப்பட்டு இருந்தது. ஆனால் இத்திட்டத்திற்கு அப்பகுதி மக்கள் கடுமையான எதிர்ப்பு தெரிவித்தனர், மக்களின் இந்த எதிர்ப்புக்கு விஜய் தேர்தலுக்கு முன்பு ஆதரவு அளித்தது மூலம் ஆட்சிக்கு வந்ததும் முதல்வர் விஜய் பரந்தூர் திட்டத்தை ரத்து செய்தார்.

பரந்தூர் விமான நிலையத் திட்டத்திற்குக் கையகப்படுத்தப்படும் 5,600 ஏக்கர் நிலத்தில் சுமார் 10,000 முதல் 12,000 வாக்காளர்கள் மற்றும் 1,005 குடும்பங்கள் பாதிக்கப்படும் என்ற நிலை இருந்தது. ஆனால் மீனம்பாக்கம் விமான நிலைய விரிவாக்கத்திற்காகக் கையகப்படுத்தும் வெறும் 217 ஏக்கர் நிலத்தில் மட்டுமே சுமார் 25,000 வாக்காளர்கள் மற்றும் 5,800 குடும்பங்கள் உள்ளனர். மேலும் மணப்பாக்கம், கொளப்பாக்கம், கவுல் பஜார் ஆகிய பகுதிகள் மக்கள் அதிகம் வாழும் பகுதி என்பதாலும், இது நகரமயமாக்கப்பட்ட இடம் என்பதாலும் நில கைப்பற்றலுக்கு பெரும் தொகை யைக் கொடுக்க வேண்டியிருக்கும். டிவிட்டரில் வெளியாகியுள்ள பல்வேறு பதிகளின் அடிப்படையில் இந்த 217 ஏக்கர் நிலம் கையகப்படுத்தும் வரையில் நிலம் கையகப்படுத்துவதற்கு மட்டுமே பெரும் தொகையைச் செலவிட வேண்டியிருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இதில் கவனிக்கவைக்கும் வகையில் நம்ம சென்னை என்ற பக்கத்தில் நிலம் கையகப்படுத்துவதற்கு மட்டுமே 24000 கோடி செலவாகும் எனத் தெரிவித்துள்ளது.

சமீபத்தில் ஏர்போர்ட் அத்தாரிட்டி ஆப் இந்தியா சரக்கு போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கும் பிரச்சனைகளைச் செய்ய 19.06 ஏக்கர் நிலத்தை 278 கோடி ரூபாய்க்கு வாங்கியது குறிப்பிடத்தக்கது. ஆனால் தற்போது தமிழக அரசு கைப்பற்றும் இடம் மக்கள் அதிகம் இருக்கும் பகுதி என்பதால் இழப்பீடு அதிகம் கொடுக்க நேரிடம் என கணிக்கப்பட்டு உள்ளது.\

அடுத்த 15–25 வருடத்திற்குத் தேவையான கட்டமைப்பை உருவாக்கத் திட்டமிடப்பட்ட பரந்தூர் விமான நிலையத்தின் மொத்த பட்ஜெட் 35000 கோடி ரூபாயாக இருந்த நிலையில் மீனம்பாக்கம் விமான நிலையத்தின் விரிவாக்கத்திற்காக வாங்கப்படும் இடம் மட்டுமே 3000 கோடி ரூபாய் ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தாராபுரத்தில் 30 இடங்களில் மக்களை சந்திக்கும் முதல்வர் விஜய்!




தாராபுரம், அக். 04–

தாராபுரத்தில் 30 இடங்களில் முதல்வர் விஜய் ஞாயிற்று க்கிழமை (அக். 4) மக்களை சந்திக்கவுள்ளார். தமிழகத்தில் இடைத்தேர்தல் நடைபெறவுள்ள தாராபுரம் மற்றும் மதுராந்தகம் ஆகிய தொகுதிகளுக்கான பிரசாரம் இன்று மாலை 6 மணியுடன் முடிவடைகிறது. எனவே, தமிழக முதல்வரும், தவெக தலைவருமான விஜய் தாராபுரம் தொகுதிக்கு மீண்டும் வருகை தந்து வாக்கு சேகரிக்க உள்ளார்.

தாராபுரத்தில் மேட்டுக்கடை பகுதியிலிருந்து தாசர்புரம் வரையில் 114 கி.மீ தொலைவுக்கு சுமார் 30 இடங்களில் சாலை வலம் செல்ல திட்டமிடப்பட்டுள்ளது. இதுகுறித்து அதிகாரப்பூர்வமாக தவெக வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில் தெரிவித்திருப்பதாவது:

தமிழக வெற்றிக் கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் தாராபுரம் சட்டப்பேரவைத் தொகுதியில் இன்று மதியம் 1.00 மணி அளவில் மாருதி நகரில் தொடங்கி சாலை வழியாக தேர்தல் பரப்புரை மேற்கொண்டு, மதச்சார்பற்ற சமூகநீதி வெற்றிக் கூட்டணியின் தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் சத்தியபாமாவுக்காக பொதுமக்களிடையே வெற்றிச் சின்னமாம் விசில் சின்னத்திற்கு வாக்கு சேகரிக்கின்றார்.

அவரது வாகனப் பிரசாரம் பின்வரும் வழித்தடத்தில் திட்டமிடப்பட்டுள்ளது.

1.மாருதி நகர் 2.உடுமலைப்பேட்டை சாலை சந்திப்பு 3.காவல்நிலையம் சந்திப்பு 4.ஐந்து சாலை சந்திப்பு 5.மீனாட்சிபுரம் 6.குளத்துப்பாளையம் 7.கரையூர் 8.மூலனூர் 9.வஞ்சியம்மன் கோயில், காவல் துறை வழிகாட்டு நெறிமுறைகளின்படி இந்த நிகழ்ச்சியானது மாவட்ட நிர்வாகிகளால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

போக்குவரத்திற்கு இடையூறாக யாரும் வாகனங்களை நிறுத்துவதோ அல்லது வந்து செல்வதோ, கண்டிப்பாகக் கூடாது. முதல்வரின் தாராபுரம் தொகுதி வாகனப் பிரசாரத்தின்போது, கர்ப்பிணிப் பெண்கள், சிறுவர் – சிறுமியர், பள்ளி மாணவ – மாணவியர், மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகள், உடல்நலம் குன்றியவர்கள் உள்ளிட்டவர்களுக்கு கண்டிப்பாக அனுமதியில்லை.

இந்தப் பிரசாரத்தில் கலந்துகொள்ள உள்ளவர்களுக்குத் தேவையான குடிநீர், மருத்துவ வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. முதல்வரின் வாகனப் பிரசாரத்தில் கலந்துகொள்ள வேண்டாம் எனக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளவர்கள் அனைவரும், இந்த நிகழ்ச்சியைத் தொலைக்காட்சி, சமூக வலைத்தள நேரலைகளில் கண்டு, பிரசாரம் வெற்றிகரமாக நடைபெற முழு ஒத்துழைப்பு தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**மூலனூர் வஞ்சியம்மன் கோயிலில் சாமி தரிசனம்!**

தாராபுரம் தொகுதியில் பிரசாரம் மேற்கொள்ளும் முதல்வர் விஜய், மூலனூர் வஞ்சியம்மன் கோயிலில் இன்று(அக். 4) சாமி தரிசனம் செய்யவுள்ளதாகத் தகவல் தெரியவந்துள்ளது.

கோவையிலிருந்து சாலை வழியில் வரும்போது, வழியில் பொதுமக்கள் அவருக்கு ஆங்காங்கே வரவேற்பு கொடுப்பதால் ஏற்படும் காலதாமதத்தை தவிர்ப்பதற்காகவே அவர் ஹெலிகாப்டரில் வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தாராபுரத்தில் மேட்டுக்கடை பகுதியிலிருந்து தாசர்புரம் வரையில் 114 கி.மீ தொலைவுக்கு சுமார் 30 இடங்களில் சாலை வலம் செல்ல திட்டமிடப்பட்டுள்ளது. தாராபுரம் பிரசாரத்தை முடித்துக்கொண்டு, வெள்ளக்கோவிலை அடுத்த மூலனூர் வஞ்சியம்மன் கோயிலில் முதல்வர் சி. ஜோசப் விஜய் சாமி தரிசனம் செய்யவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முதல்வர் வருகையையொட்டி, மூலனூர் வஞ்சியம்மன் கோயிலில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. முன்னேற்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# அமெரிக்கா - சீனா இடையே தொடரும் கருத்து வேறுபாடுகள்!



வாஷிங்டன், அக். 04–

சீன அதிபர் ஷி ஜின்பிங் மற்றும் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ஆகியோர் வெள்ளை மாளிகையில் சந்திப்பு நடத்திய நிலையில் இரு நாடுகளிடையே சுமூகமான சூழல் அமையும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அமெரிக்கா – சீனா இடையே தொடர்ந்து கருத்து வேறுபாடுகள் நீடிப்பதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சீன அதிபர் ஷி ஜின்பிங் கடந்த வாரம் அமெரிக்கப் பயணம் மேற்கொண்டார். இந்தப் பயணம் மேற்கொள்வதற்கு முன்பிருந்தே இரு தரப்பிலும் சில சிக்கல்கள் இருந்ததாகவும், அதுதொடர்பாக அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் கூறப்படுகிறது. இதனை, டிரம்ப்பின் நெருங்கிய உதவியாளரான ஸ்டீவ் டெய்ன்ஸ் உறுதிப்படுத்தியுள்ளார்.

அவர் தனியார் செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில், ”இரு நாடுகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து நடத்துவது மிகவும் முக்கியம். ஏனெனில், இரு தரப்பிலும் தீவிரமான கருத்து வேறுபாடுகள் உள்ளன என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், இதற்கான தீர்வு அதிலிருந்து பின்வாங்குவது அல்ல. மாறாக தொடர்ந்து ஈடுபாட்டுடன் செயல்படுவதே அதற்குத் தீர்வு’’ என்று கூறினார். முக்கிய கனிமங்கள் தொடர்பான விவகாரத்தில் சீனா தனது ஆதிக்க நிலையை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்துவதாக அமெரிக்கத் தூதர் டேவிட் பெர்டியூ முன்வைத்த குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் வகையில் அவர் இவ்வாறு பேசினார்.

ஸ்மார்ட்போன்கள் முதல் போர் விமானங்கள் வரையிலான தயாரிப்புகளுக்கு முக்கியத் தேவைகளாக உள்ள ‘அரிய வகை கனிமங்கள்’, உலகின் மிகப்பெரிய இரு பொருளாதார நாடுகளுக்கும் இடையே ஒரு முக்கிய மோதல் புள்ளியாகத் தொடர்ந்து நீடிக்கின்றன.

வெள்ளை மாளிகை சார்பில் கடந்த வாரம் உச்சி மாநாடு தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில், அரிய வகை கனிமங்கள் மற்றும் பிற முக்கிய கனிமங்களின் விநியோகச் சங்கிலித் தட்டுப்பாடு குறித்த அமெரிக்காவின் கவலைகள் பற்றி இரு தரப்பும் தொடர்ந்து பணியாற்றும் என்றும், விநியோகத்தை மீண்டும் சரியான நிலைக்குக் கொண்டு வருவதே இதன் நோக்கம் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அரிய வகை கனிமச் சுரங்கத் தொழிலில் உலகளவில் சுமார் 70 சதவீதமும், அவற்றைச் சுத்திகரிப்பதில் கிட்டத்தட்ட 90 சதவீதமும் சீனாவின் பங்களிப்பாக உள்ளது.

அதுமட்டுமின்றி, தைவான் விவகாரமும் அமெரிக்கா – சீனா இடையே முக்கிய மோதல் புள்ளியாகத் தொடர்கிறது.

தைவானுக்கு அமெரிக்கா ஆயுதங்களை விற்பனை செய்வது தொடர்பாகப் பேசிய டெய்ன்ஸ், “அதற்கான விடை தெரிந்த ஒரே நபர் டிரம்ப் மட்டும்தான். இது தொடர்ந்து விவாதிக்கப்படும் ஒரு விஷயமாக இருக்கும்; இது முடிவுக்கு வரப்போவதில்லை,’’ என்று கூறினார்.

அமெரிக்க நாடாளுமன்ற ஒப்புதல் வழங்கப்பட்ட நிலையிலும், கடந்த மே மாதம் டிரம்ப் சீனா செல்வதற்கு முன்பு, 14 பில்லியன் டாலர் மதிப்பிலான ஆயுத விற்பனையை தற்காலிகமாக வெள்ளை மாளிகை நிறுத்தி வைத்திருந்தது.

அதற்கு முன் டிசம்பரில் 11 பில்லியன் டாலர் மதிப்புள்ள அமெரிக்க ஆயுத விற்பனைத் திட்டத்திற்கு சீனாவிடம் கடுமையான எதிர்ப்புகளைக் கிளப்பியது.

கடந்த செப். 24 அன்று நடைபெற்ற சந்திப்பில், தைவானின் சுதந்திரத்தை வெளிப்படையாக எதிர்க்க டிரம்ப்பை ஷி வலியுறுத்தியதாக செய்தி வெளியானது.

அமெரிக்காவில் நடைபெற்ற உச்சிமாநாட்டைத் தொடர்ந்து, அடுத்த மாதம் ஷென்சென்னில் நடைபெறவுள்ள ஏபிஇசி கூட்டத்திலும், அதைத் தொடர்ந்து டிசம்பரில் மியாமியில் நடைபெறவுள்ள ஜி–20 உச்சிமாநாட்டிலும் மீண்டும் சந்திக்க டிரம்ப் மற்றும் ஷி ஆகியோர் ஒப்புக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

தலையங்கம்
மதுரை மணி
ஞாயிற்றுக்கிழமை 04.10.2026
விசுவாவசு தமிழ் வருடம்
புரட்டாசி மாதம் 17-ம் தேதி

# மின்தேவை உயர்வு: திட்டமிடல் அவசியம்!



மின்சாரம் இன்று அன்றாட வாழ்க்கையின் அடிப்படைத் தேவையாகிவிட்டது. வீடுகள், தொழிற்சாலைகள், விவசாயம் என அனைத்துத் துறைகளின் வளர்ச்சிக்கும் தடையில்லா மின்சாரம் அவசியம். தமிழகத்தில் அதிகரித்து வரும் மின்தேவை, எதிர்காலத்திற்கான திட்டமிடலின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

கடந்த ஆண்டு செப்டம்பரில் 17,500 மெகாவாட்டாக இருந்த உச்ச மின்தேவை, இந்த ஆண்டு 21,400 மெகாவாட்டை எட்டியுள்ளது. புதிய தொழிற்சாலைகள், கூடுதல் மின் இணைப்புகள், குளிர்சாதனங்களின் பயன்பாடு ஆகியவை தேவையை உயர்த்துகின்றன. இந்த வளர்ச்சிக்கு ஏற்ப மின் உற்பத்தியும் கட்டமைப்பும் மேம்பட வேண்டும்.

உடன்குடி அனல் மின்நிலையத்தின் முதல் பிரிவில் 660 மெகாவாட் உற்பத்தி தொடங்கியிருப்பது வரவேற்கத்தக்கது. இரண்டாவது பிரிவையும் திட்டமிட்ட காலத்திற்குள் செயல்படுத்த வேண்டும். தூத்துக்குடியில் அறிவிக்கப்பட்டுள்ள 1,600 மெகாவாட் மின் திட்டத்தையும் தாமதமின்றி முன்னெடுக்க வேண்டும்.

அதேவேளையில், புதிய அனல் மின் திட்டங்களை மட்டும் நம்பியிருப்பது போதாது. சூரிய மின்சாரம், காற்றாலை மின்சாரம் மற்றும் மின் சேமிப்புக் கட்டமைப்புகளுக்கும் முன்னுரிமை அளிக்க வேண்டும். மின் விநியோக இழப்புகளைக் குறைப்பதும், பழைய உபகரணங்களை மேம்படுத்துவதும் அவசியம்.

அரசின் நடவடிக்கைகளுடன் மக்களின் பொறுப்பும் இணைந்திருக்க வேண்டும். தேவையற்ற மின் பயன்பாட்டைத் தவிர்ப்பதும், மின்சிக்கன சாதனங்களைப் பயன்படுத்துவதும் சிறிய செயல்களாகத் தோன்றினாலும், பெரிய அளவில் பயன் தரும். தடையில்லா மின்சாரம், நியாயமான செலவு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு—இந்த மூன்றையும் இணைக்கும் தொலைநோக்குத் திட்டமே தமிழகத்தின் வளர்ச்சிக்கு உறுதியான அடித்தளம் அமைக்கும்.

**ஆசிரியர்,**
**மதுரை மணி**

# ராசிபுரத்தில் பக்தர்களை மாடு தாண்டும் விநோதமான நிகழ்ச்சி!



இராசிபுரம், அக். 04–

ராசிபுரத்தில் உள்ள பொன் வரதராஜ பெருமாள் கோவிலில் புரட்டாசி 3 வது வார சனிக்கிழமை முன்னிட்டு சிறப்பு பூஜை செய்யப்பட்டு பக்தர்களை மாடு தாண்டும் விநோதமான நிகழ்ச்சி வெகு விமர்சையாக நடைபெற்றது.

ராசிபுரம் பெருமாள் கோவிலில் நடந்த பக்தர்களை மாடு தாண்டும் வழிபாட்டில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்றனர். அங்கு முக்கிய நிகழ்வாக பக்தர்கள் மீது மாடு தாண்டும் வழிபாடு நிகழ்ச்சி நடந்தது.

கோவிலுக்கு மாடு அழைத்து வரும் வழியில் ஆண் பெண் குழந்தைகள் பக்தர்கள் அனைவரும் தரையில் படுத்துக்கொண்டனர்.படுத்திருந்த பக்தர்களை மாடு தாண்டி செல்லும்போது அதன் கால் பக்தர்கள் மேல் படாமல் சென்றால் வாக்கு பலிக்கும் என்பதும் கால் பட்டு விட்டாலோ அல்லது தாண்டாமல் நின்று விட்டாலோ பக்தர்களின் வேண்டுதல் நிறைவேறாது என்பதும் நம்பிக்கை. கடந்த இருநூறு வருடங்களுக்கு மேல் இந்த நிகழ்வு நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.




தாராபுரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் அஇஅதிமுக வெற்றி வேட்பாளர் திருமதி. பானுமதி அவர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ள தாராபுரம் வருகை புரிந்த அமமுக பொதுச்செயலாளர் திரு.டிடிவி. தினகரன் அவர்களை அதிமுக திருப்பூர் மாநகர மாவட்ட செயலாளர் வேல் குமார் சாமிநாதன் அவர்கள் சால்வை அணிவித்து வரவேற்றார்

# பொதுத்துறை நிறுவனங்களுக்கு போனஸ்?



சென்னை, அக். 04–

தீபாவளியை முன்னிட்டு, மாநில பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் 2.75 லட்சம் பணியாளர்களுக்கு, 20 சதவீதம் போனஸ் வழங்க 885 கோடி ரூபாய் செலவாகும் என தமிழக அரசு மதிப்பீடு செய்துள்ளது.

மின் வாரியம், நுகர்பொருள் வாணிப கழகம், அரசு போக்குவரத்து கழகங்கள் உள்ளிட்ட பல பொதுத்துறை நிறுவனங்கள் செயல்படுகின்றன. அவற்றில் பணிபுரியும், 'டி' பிரிவு பணியாளர்களுக்கு ஆண்டுதோறும் தீபாவளி போனஸ் வழங்கப்படுகிறது. வழக்கமாக, 8.33 சதவீதம் மிகை ஊதியம், 11.67 சதவீதம் கருணை தொகை என மொத்தம், 20 சதவீதம் போனஸ் தொகை வழங்கப்படுகிறது.

இதன் வாயிலாக ஒருவருக்கு 8,400 ரூபாய் முதல் 16,800 ரூபாய் வரை கிடைக்கிறது. இந்தாண்டு நவ., 8ம் தேதி தீபாவளி பண்டிகை கொண்டாடப்படுகிறது. ஒரு மாதமே உள்ளதால் தீபாவளிக்கு, 20 சதவீதம் போனஸ் வழங்கினால். 2.75 லட்சம் பேருக்கு, 385 கோடி ரூபாய் செலவாகும் என நிதித்துறை மதிப்பீடு செய்து தமிழக அரசுக்கு தகவல் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, நிதித்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது,

அடுத்த மாதம் தீபாவளி வருவதால், விரைவாக போனஸ் நிர்ணய பேச்சு தொடங்குமாறு தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுப்பதாக பொதுத்துறை நிறுவனங்களிடம் இருந்து தகவல்கள் வந்துள்ளன. அரசு நிதி நெருக்கடியில் இருப்பதால் இந்தாண்டும், 20 சதவீதம் போனஸ் வழங்கவே அதிக வாய்ப்புள்ளது. அதற்கு 2.75 லட்சம் பேருக்கு, 386 கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. தொழிற் சங்கங்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப 5 சதவீதம் கூடுதல் போனஸ் அறிவித்தால் 100 கோடி ரூபாய் வரை கூடுதல் செலவாகும்

இவ்வாறு அவர் கூறினார்.

# திருச்சி சிவா, கனிமொழிக்கு நாடாளுமன்ற நிலைக் குழுக்கள் தலைமைப் பொறுப்பு!



புதுடெல்லி, அக். 04–

பல்வேறு துறைகள் தொடர்பான நாடாளுமன்ற நிலைக் குழுக்களை மாற்றியமைத்து, மாநிலங்களவைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன், மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா ஆகியோர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். அதன்படி, திமுக எம்.பி.க்கள் திருச்சி சிவா, கனிமொழி ஆகியோர் முறையே தொழில் துறை மற்றும் உணவு, நுகர்வோர் விவகாரங்கள், பொது விநியோகத் துறை சார்ந்த நாடாளுமன்ற நிலைக் குழுக்களின் தலைவர்களாக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம், மம்தா தலைமையிலான திரிணமூல் காங்கிரஸ் கட்சி இரு குழுக்களின் தலைமைப் பொறுப்பை இழந்துள்ளது. வர்த்தக துறை தொடர்பான நாடாளுமன்றக் குழுத் தலைவராக இருந்த திரிணமூல் காங்கிரஸின் டோலா சென் மாற்றப்பட்டு, பாஜகவின் சுதான்ஷு திரிவேதி நியமிக்கப்பட்டுள்ளார். ரசாயனங்கள் மற்றும் உரங்கள் துறை தொடர்பான நாடாளுமன்றக் குழுத் தலைவராக இருந்த திரிணமூல் காங்கிரஸின் கீர்த்தி ஆசாத் மாற்றப்பட்டு, அக்கட்சியின் அதிருப்தி அணி தலைவர் ககோலி கோஷ் தஸ்திதார் நியமிக்கப்பட்டுள்ளார்.

சசிதரூருக்கு மீண்டும் பொறுப்பு: எதிர்க்கட்சிகளைப் பொருத்தவரை, காங்கிரஸ் எம்.பி.க்களான சசி தரூர் (வெளியுறவு விவகாரங்கள்), சரண்ஜித் சிங் சன்னி (வேளாண்மை துறை), முகுல் வாஸ்னிக் (கல்வி, பெண்கள், குழந்தைகள், இளைஞர்கள் நலன்), சப்தகிரி சங்கர் உலாகா (ஊரக மேம்பாடு, உள்ளாட்சித் துறை), சமாஜவாதியின் ராம் கோபால் வர்மா (சுகாதாரம், குடும்ப நலன்) ஆகியோர் குழுத் தலைவர்களாக தக்கவைக்கப்பட்டுள்ளனர்.

பாஜகவின் கூட்டணிக் கட்சிகளான ஐக்கிய ஜனதா தளம், சிவசேனை கட்சிகளுக்கான தலைமைப் பொறுப்பும் மீண்டும் வழங்கப்பட்டுள்ளது.

பாஜகவின் ராதா மோகன் சிங் (பாதுகாப்பு), ஐக்கிய ஜனதா தளத்தின் சஞ்சய் குமார் ஜா (போக்குவரத்து, சுற்றுலா, கலாசாரம்), சிவசேனையின் ஸ்ரீரங் பார்னே (எரிசக்தி) ஆகியோரும் அந்தந்தக் குழுக்களின் தலைவர்களாக தொடர்கின்றனர்.

மாற்றப்பட்ட பாஜக எம்.பி.க்கள்: பணியாளர், பொது குறைதீர்ப்பு, சட்டம் மற்றும் நீதித் துறை சார்ந்த நாடாளுமன்றக் குழுத் தலைவராக இருந்த பாஜகவின் பிரிஜ் லால் மாற்றப்பட்டு, அக்கட்சியின் சுஜீத் குமார் நியமிக்கப்பட்டுள்ளார். ரயில்வே துறை தொடர்பான நாடாளுமன்றக் குழுத் தலைவராக இருந்த பாஜகவின் சி.எம்.ரமேஷ் மாற்றப்பட்டு, அக்கட்சியின் சுதீர் குப்தா நியமிக்கப்பட்டுள்ளார்.

நிலக்கரி, சுரங்கங்கள், உருக்குத் துறை தொடர்பான குழுவின் தலைவராக முன்னாள் மத்திய அமைச்சர் அனுராக் தாக்குர், நீர்வளங்கள் தொடர்பான குழுவின் தலைவராக பாஜகவின் ராஜீவ் பிரதாப் ரூடி ஆகியோர் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பாஜகவின் பார்த்ருஹரி மஹதாப் (நிதித் துறை), ராதா மோகன் தாஸ் அகர்வால் (உள்துறை), நிஷிகாந்த் துபே (தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பம்), மேதா விஷ்ராம் குல்கர்னி (அறிவியல்–தொழில்நுட்பம், சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும் பருவநிலை மாற்றம்) ஆகியோர் குழுத் தலைவர்களாக தொடர்கின்றனர்.

# ஹசீனா நாடு கடத்தல்: காலக்கெடு இல்லை - இந்தியா!



புதுடெல்லி, அக். 04–

வங்கதேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவை அந்நாட்டுக்கு நாடு கடத்துவது தொடர்பாக, இந்தியா காலக்கெடு நிர்ணயிக்க முடியாது என்று வங்கதேசத்துக்கான இந்திய தூதர் தினேஷ் திரிவேதி தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக வங்கதேச தலைநகர் டாக்காவில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் அவர் கூறியதாவது: இந்தியாவில் இருந்து ஷேக் ஹசீனாவை நாடு கடத்த வேண்டும் என்ற வங்கதேச அரசின் கோரிக்கை, ஏற்கெனவே உள்ள நடைமுறைகளின்படி பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அந்த நடைமுறைகள் சட்டபூர்வமானவை. இதை பலமுறை இந்தியா தெரிவித்துள்ளது.

வங்கதேசத்தில் இருந்து இந்திய விமானப் படை அல்லது ராணுவம் மூலம் இந்தியாவுக்கு ஹசீனா அழைத்து வரப்படவில்லை. வங்கதேச விமானப் படை ஹெலிகாப்டர் மூலம்தான், அவர் இந்தியா வந்தார். அந்த நேரத்தில் ஹசீனா வங்கதேசத்தின் பிரதமராக இருந்தார். அவருக்கு அடைக்கலம் அளிப்பதைத் தவிர, அப்போது இந்தியாவுக்கு வேறு வழியே இல்லை.

வங்கதேசத்தின் அண்டை நாடாக, எதார்த்த நிலையை ஏற்றுக்கொள்ள வேண்டியது இந்தியாவின் கடமை. ஏனெனில், சில நேரங்களில் நாம் எதிர்பாராத சூழ்நிலைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும். ஹசீனாவுக்கு அடைக்கலம் அளிக்கப் போவதில்லை; ஹெலிகாப்டரை தரையிறங்க அனுமதிக்கமாட்டோம் என்று இந்தியா தெரிவித்திருந்தால், நிலைமை என்ன ஆகியிருக்கும் என்றே தெரியாது.

வங்கதேசத்தில் ஏற்பட்ட துயரமான சூழ்நிலைகளின் காரணமாகவே ஹசீனாவின் ஆட்சி கவிழ்ந்து, அவர் இந்தியாவில் அடைக்கலம் தேடும் நிலைமை உருவானது. அதுபோன்ற சூழ்நிலைகள் உலகின் எந்தப் பகுதியிலும் மீண்டும் ஏற்படக் கூடாது.

ஹசீனாவை வங்கதேசத்துக்கு நாடு கடத்துவது தொடர்பாக இந்தியா காலக்கெடு நிர்ணயிக்க முடியாது. அவர் எப்போது வங்கதேசத்துக்குத் திருப்பி அனுப்பப்படுவார் என்பதற்கான காலவரையறையை யாராலும் கூற இயலாது என்று தெரிவித்தார்.

கடந்த 2024–ஆம் ஆண்டு வங்கதேசத்தின் அப்போதைய பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா அரசுக்கு எதிராக மாணவர்களும், பொதுமக்களும் தீவிரப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அவரின் ஆட்சி கவிழ்ந்ததைத் தொடர்ந்து, அவர் வங்கதேசத்தில் இருந்து இந்தியாவுக்கு தப்பி வந்தார். அவரைத் திருப்பி அனுப்பி வைக்குமாறு இந்தியாவிடம் வங்கதேசம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. கடந்த ஜூலையில் ஆங்கில செய்தி நிறுவனம் ஒன்றுக்கு ஹசீனா அளித்த பேட்டியில், அவர் நிகழாண்டு டிசம்பரில் வங்கதேசம் திரும்பி, அங்குள்ள நீதிமன்றத்தில் சரணடைய திட்டமிட்டு ள்ளதாகத் தெரிவித்தார். அவர் தற்போது புது தில்லியில் உள்ளதாகக் கூறப்படுகிறது.

# ஏ.ஐ. பாதுகாப்பு ஒப்பந்தம் முதல் வாட்ஸ்ஆப் பெற்றோர் கட்டுப்பாட்டு வசதி வரை!

தொழில்நுட்ப உலகில் இந்த வாரம் புதிய ஸ்மார்ட்போன்கள் உள்பட சாதனங்களின் வெளியீடுகள், நிறுவனங்களின் நிதி முதலீடுகள் மற்றும் ஏ.ஐ. தொழில்நுட்பத் திருப்புமுனைகளும் பெரும் கவனம் ஈர்த்தன.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் முன்னிலையில் கையொப்பமான ஏ.ஐ. பாதுகாப்பு ஒப்பந்தம் முதல் வாட்ஸ்ஆப் பெற்றோர் கட்டுப்பாட்டு வசதி வரை இந்த வாரத்தின் முக்கியத் தொழில்நுட்பச் செய்திகளின் தொகுப்பு இதோ:

ஏ.ஐ. பாதுகாப்பு ஒப்பந்தம்: ஏ.ஐ. நிறுவனங்கள் சுயமாகக் கண்காணித்துக் கொள்ளும் புதிய பாதுகாப்பு ஒப்பந்தம், வெள்ளை மாளிகையில் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் முன்னிலையில் கையொப்பமானது.

நிறுவனங்களின் நிதி முதலீடுகள்: எச்.சி.எல். டெக். நிறுவனத்தின் மென்பொருள் பிரிவு, ஐரோப்பிய நிறுவனமான 'ரோபோடிக்ஏஜ'–ஐ 90 லட்சம் யூரோக்களுக்குக் கையகப்படுத்தியுள்ளது. அதேபோல், பெர்சிஸ்டன்ட் சிஸ்டம்ஸ் நிறுவனம், நகாரோ நிறுவனத்தில் தனது பங்கை 83.2 சதவீதமாக உயர்த்தியுள்ளது.

*சாம்சங் 'கேலக்ஸி டேப் எஸ்12' சீரிஸ்: சாம்சங் நிறுவனத்தின் கையடக்க கணினிகளான (டேப்) கேலக்ஸி டேப் எஸ்12 அல்ட்ரா (14.6 அங்குல திரை, ரூ.1.5 லட்சம்) மற்றும் கேலக்ஸி டேப் எஸ்12 பிளஸ் (12.6 அங்குல திரை, ரூ.1.3 லட்சம்) இந்தியாவில் அறிமுகமாகியுள்ளது.

*ஷாவ்மி ரெட்மி 17சி: 6.9 அங்குல திரை, 6,000 எம்ஏஎச் பேட்டரி, 4 ஜிபி ரேம் ஆகியவற்றுடன் கூடிய 'ரெட்மி 17சி' ஸ்மார்ட்போன் ரூ.20,999 ஆரம்ப விலையில் அறிமுகமாகியுள்ளது.

*ஒப்போ கே14 பிளஸ்: 6.78 அங்குல திரை, 8,000 எம்ஏஎச் பேட்டரி, 6 ஜிபி ரேம் ஆகியவற்றுடன் 'ஒப்போ கே14 பிளஸ்'ஸ்மார்ட்போன் ரூ.29,999 ஆரம்ப விலையில் அக். 8 முதல் விற்பனைக்கு வருகிறது.

*கூகுள் 'ஃபிட்பிட் ஏர்': கூகுளின் திரை இல்லாத ஆரோக்கிய கண்காணிப்பு சாதனமான 'ஃபிட்பிட் ஏர்' மாடலை ரூ.13,999 விலையில் அறிமுகமாகியுள்ளது.

*டீப்ஸீக் & ஹூவாவெய் மென்பொருள்: சீனாவின் டீப்ஸீக் நிறுவனம், ஹூவாவெய் உடன் இணைந்து என்விடியாவின் 'சியுடிஏ' மென்பொருளுக்குப் போட்டியாக புதிய திறந்தநிலை மென்பொருளை வெளியிட்டுள்ளது.

*ஓபன்ஏஐ நிதி திரட்டல்: ஓபன்ஏஐ நிறுவனம் 3,000 கோடி டாலர் நிதியைத் திரட்ட இலக்கு வைத்துள்ளதோடு, புதிய 'டாட்ஸ்' ஏ.ஐ. உதவியாளரை அறிமுகப்படுத்தியுள்ளது. அதேபோல், இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் ஓபன்ஏஐ நிறுவனத்துடன் கைகோத்துள்ளதாக அறிவித்துள்ளார்.

*மெட்டா மியூஸ் ஏ.ஐ. சாதனை: சிறு வணிகங்களுக்காக மெட்டா தனது 'மியூஸ்' ஏ.ஐ. ஏஜென்டை விரிவுபடுத்தியுள்ளது. மியூஸ் செயலி 50 லட்சத்துக்கும் அதிகமான பதிவிறக்கங்களையும், வாரந்தோறும் 30 லட்சம் பயனர்களையும் கடந்துள்ளது. அத்துடன் தனது 'எடிட்ஸ்' தளத்திலும் புதிய ஏ.ஐ. உதவியாளரை மெட்டா சேர்த்துள்ளது.

*வாட்ஸ்ஆப் பெற்றோர் கட்டுப்பாட்டு வசதி: பதின்ம வயதினரைப் பாதுகாக்கும் நோக்கில், பெற்றோர் கண்காணிப்பை வலுப்படுத்தும் புதிய அம்சத்தை வாட்ஸ்ஆப் அறிமுகப்படுத்தியுள்ளது.



# வயது 40-க்கு மேல் அதிர்ஷ்டம்!



வாழ்க்கையில் வெற்றி அனைவருக்கும் ஒரே வயதில் கிடைப்பதில்லை. சிலருக்கு இளமையில் வாய்ப்புகள் கைகூடும்; சிலருக்கு அனுபவம் அதிகரித்த பிறகே முன்னேற்றம் ஏற்படும். ஜோதிடப் பார்வையில், ரிஷபம், கன்னி, மகரம் ஆகிய மூன்று ராசியினருக்கு 40 வயதுக்குப் பிறகு தொழில், வேலை மற்றும் பொருளாதாரத்தில் நல்ல மாற்றங்கள் ஏற்படலாம் என்று கூறப்படுகிறது.

**ரிஷபம்: உழைப்புக்குப் பலன்!**

ரிஷப ராசியினர் பொறுமை, பொறுப்புணர்வு மற்றும் கடின உழைப்புக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள் என ஜோதிடம் கூறுகிறது. ஆரம்பத்தில் தடைகள் இருந்தாலும், வயதுடன் சேரும் அனுபவம் சரியான முடிவுகளை எடுக்க உதவலாம். 40 வயதுக்குப் பிறகு தொழில், வணிக வளர்ச்சி மற்றும் நிதிநிலை மேம்பாட்டுக்கான வாய்ப்புகள் அதிகரிக்கலாம். சேமிப்பிலும் திட்டமிடலிலும் காட்டும் கவனம் நிலையான வளர்ச்சிக்கு உதவக்கூடும்.

**கன்னி: திட்டங்கள் கைகூடும்!**

ஒவ்வொரு செயலையும் ஆராய்ந்து மேற்கொள்ளும் கன்னி ராசியினருக்கு முன்னேற்றம் மெதுவாக அமையலாம். அதிக சிந்தனையால் சில முடிவுகள் தாமதமானாலும், அனுபவம் அவர்களின் செயல்திறனை மேம்படுத்தலாம். 40 வயதுக்குப் பிறகு திட்டமிட்ட முயற்சிகள் பலன் அளித்து, செல்வமும் செல்வாக்கும் உயரக்கூடும். தங்களின் திறமைகளைச் சரியாகப் பயன்படுத்துவதன் மூலம் புதிய வாய்ப்புகளை அடையாளம் காணலாம்.

**மகரம்: முயற்சியே முன்னேற்றம்!**

சனியை அதிபதியாகக் கொண்ட மகர ராசியினர் சவால்களிலும் முயற்சியைக் கைவிடாதவர்கள் எனக் கருதப்படுகின்றனர். தொடக்கத்தில் பொறுப்புகள் அதிகமாக இருந்தாலும், ஒழுக்கமும் உழைப்பும் வளர்ச்சிக்கு அடித்தளமாக அமையலாம். 40 வயதுக்குப் பிறகு வேலை, தொழில் மற்றும் வணிகத்தில் நிலையான முன்னேற்றம் கிடைக்கலாம். கடந்தகால அனுபவங்கள் எதிர்கால முடிவுகளுக்கு வழிகாட்டியாக அமையக்கூடும்.

இந்த மூன்று ராசிகளுக்கும் பொறுமை, அனுபவம், தொடர்ச்சியான முயற்சி ஆகியவையே முன்னேற்றத்தின் முக்கிய அம்சங்களாகக் குறிப்பிடப்படுகின்றன. அதிர்ஷ்ட வாய்ப்புகள் பற்றிய எதிர்பார்ப்புடன், நடைமுறைத் திட்டங்களையும் உழைப்பையும் தொடர்வது அவசியம். பலன்கள் தனிநபரின் சூழலுக்கு ஏற்ப மாறுபடலாம். ஒவ்வொருவரின் திறன், வாய்ப்பு, செயல்பாடு ஆகியவையும் வாழ்க்கை வளர்ச்சியில் பங்கு வகிக்கின்றன. இவை ஜோதிட நம்பிக்கைகள்; அறிவியல் ஆதாரம் இல்லை.

# எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி மீது வழக்குப்பதிவு!



திருப்பூர், அக். 04–

தமிழக முதல்வரை அவமானப்படுத்தும் விதத்தில் குழந்தையை வைத்து பேச வைத்தது, தேர்தல் பிரசாரத்திற்கு குழந்தைகளை பயன்படுத்தியதாக, எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி மீது தாராபுரம் போலீஸ் ஸ்டேஷனில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

# டி.ராஜேந்தர் பிறந்தநாள்: 1,000 பேருக்கு அரிசி தானம்!




டி.ராஜேந்தரின் 71வது பிறந்தநாளையொட்டி, அகில இந்திய டி.ராஜேந்தர் தலைமை ரசிகர் மன்றம் சார்பில் 1,000 பேருக்கு இலவச அரிசி வழங்கப்பட்டது. டி.ராஜேந்தர் தலைமை ரசிகர் மன்ற அமைப்பாளரும், STR தலைமை ரசிகர் மன்றத் தலைவருமான டி.வாசு முன்னிலை வகித்து, பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.தனது 71வது பிறந்தநாளை முன்னிட்டு, டி.ராஜேந்தர் அவர்கள் பிரத்யேகமாக ஒரு புதிய பாடலை எழுதி, இசையமைத்து, விழாவில் கூடியிருந்த அனைவரின் முன்பும் பாடி நெகிழ்ச்சியை ஏற்படுத்தினார்....

மதுரை மணி

உள்ளூர் 04.10.26 வெளியூர் 05.10.26

நலம் நலமறிய..!

மருத்துவ குறிப்புகள்



# தலைக்கு எண்ணெய்: 5 தவறுகள்!



தலைமுடிக்கு எண்ணெய் தேய்ப்பது வறண்ட முடியை மென்மையாக்க உதவும். ஆனால் எண்ணெயைத் தேர்ந்தெடுப்பதுடன், அதைத் தடவும் முறையிலும் கவனம் தேவை. தவிர்க்க வேண்டிய ஐந்து முக்கியத் தவறுகள்:

**1. சிக்கு எடுக்காமல் தடவுவது**

சிக்குள்ள முடியில் எண்ணெய் தடவி வலுவாகத் தேய்த்தால் முடி உடையலாம். முதலில் விரல்களால் மெதுவாகச் சிக்குகளை அகற்றுங்கள். சீப்பால் வலுக்கட்டாயமாக இழுக்க வேண்டாம்.

**2. அதிக அழுத்தத்துடன் மசாஜ் செய்வது**

எண்ணெய் ஊடுருவ வேண்டும் என்பதற்காகத் தலையோட்டை அழுத்தித் தேய்க்க வேண்டாம். விரல் நுனிகளில் சிறிதளவு எண்ணெய் எடுத்து, பரவலாகத் தடவி மென்மையாக மசாஜ் செய்யுங்கள்.

**3. அளவுக்கு அதிகமாக எண்ணெய் பயன்படுத்துவது**

அதிக எண்ணெய் அதிகப் பலனைத் தராது. முடியில் பிசுபிசுப்பையும் தூசி, அழுக்கு ஒட்டுவதையும் அதிகரிக்கலாம். தேவையான அளவு மட்டும் பயன்படுத்துங்கள்.

**4. இரவு முழுவதும் ஊற வைப்பது**

எண்ணெயை இரவு முழுவதும் வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை. சிறிது நேரம் கழித்து மென்மையான ஷாம்புவால் அலசலாம். பொடுகு அல்லது எண்ணெய்ப் பசையுள்ள தலையோடு கொண்டவர்கள், எண்ணெய் பயன்படுத்துவது தங்களுக்கு ஏற்றதா என்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

**5. மிகவும் சூடான எண்ணெயைத் தடவுவது**

மிகவும் சூடான எண்ணெய் தலையோட்டில் தீக்காயத்தை ஏற்படுத்தலாம். சூடாக்கினால், தடவும் முன் வெப்பத்தைச் சரிபாருங்கள்; வெதுவெதுப்பாக இருந்தால் போதும்.

மென்மையான பராமரிப்பே முக்கியம்! எண்ணெய் பயன்படுத்திய பின் அரிப்பு அல்லது எரிச்சல் ஏற்பட்டால் நிறுத்துங்கள். தொடர்ந்து பொடுகு அல்லது அதிக முடி உதிர்வு இருந்தால் தோல் மருத்துவரை அணுகுங்கள்.



சினிமா துளிகள்..!

## சிங்கீதம் சீனிவாச ராவ் மறைவு!



ஆந்திர மாநிலம், நெல்லூர் மாவட்டம் உதயகிரியில் 1931 செப். 21–ஆம் தேதி பிறந்த சிங்கீதம் சீனிவாச ராவ், சென்னை பல்கலைக்கழகத்தில் இயற்பியல் பட்டம் பெற்றவர். திரைப்படத் துறையின் மீது கொண்ட ஆர்வத்தால் புகழ்பெற்ற இயக்குநர் கே.வி.ரெட்டியிடம் உதவி இயக்குநராகப் பணியைத் தொடங்கினார். 1972–இல் வெளியான 'நீதி நிஜாயிதி' தெலுங்குத் திரைப்படம் மூலம் இயக்குநராக அறிமுகமானார்.

தமிழில் 1974–இல் வெளியான 'திக்கற்ற பார்வதி' திரைப்படம் மூலம் இயக்குநராக அறிமுகமானார். அந்தப் படத்துக்காக அவருக்கு தேசிய விருது கிடைத்தது. தொடர்ந்து, நடிகர் கமல்ஹாசன் நடித்த 'ராஜபார்வை', 'பேசும் படம்', 'அபூர்வ சகோதரர்கள்', 'மைக்கேல் மதன காமராஜன்', 'மகளிர் மட்டும்', 'காதலா காதலா', 'மும்பை எக்ஸ்பிரஸ்' மற்றும் பிரபு நடித்த 'சின்ன வாத்தியார்' உள்ளிட்ட திரைப்படங்களையும் இயக்கியுள்ளார்.

. சென்னை சாலிகிராமத்தில் வசித்து வந்த சிங்கீதம் சீனிவாச ராவ், உடல்நலக் குறைவு காரணமாக தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் காலமானார். அவரது இறுதிச்சடங்கு ஞாயிற்றுக்கிழமை (அக்.4) நடைபெறுகிறது. அவரது மறைவுக்கு திரையுலகினர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் இரங்கல் தெரிவித்தனர்.

## ஜெயிலர் 2: 'பிந்தாஸ்' வெளியீடு!



நெல்சன் இயக்கத்தில் ரஜினிகாந்த் நடித்துள்ள 'ஜெயிலர் 2' படத்தின் 'பிந்தாஸ்' பாடல் வெளியாகியுள்ளது. நோரா ஃபதேகி நடனமாடிய பாடலை, சூப்பர் சுப்பு வரிகளில் அனிருத்தும் தீப்தி சுரேஷும் பாடியுள்ளனர். 12 பாடல்கள் இடம்பெற்றுள்ள இப்படம் அக்டோபர் 15 திரைக்கு வருகிறது.

# இடைத்தேர்தல்: ஓய்ந்தது பிரசாரம்..!



சென்னை, அக்.04–

தமிழகத்தில் இடைத்தேர்தல் நடைபெறவுள்ள மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளில் பிரசாரம் (அக். 4) நிறைவடைகிறது. மாலை 6 மணிக்கு மேல் வெளிநபர்கள் தொகுதிகளிலிருந்து வெளியேறிவிட வேண்டும் என்று தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் உத்தரவிட்டுள்ளார். இதுகுறித்து அவர் சனிக்கிழமை வெளியிட்ட அறிவிப்பு: மதுராந்தகம், தாராபுரம் தனித் தொகுதிகளின் இடைத்தேர்தலுக்கான வாக்குப் பதிவு செவ்வாய்க்கிழமை (அக். 6) காலை 7 முதல் மாலை 6 மணி வரை நடைபெறும். எனவே, ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி முதல் வாக்குப் பதிவு முடிவடையும் வரை 1951–ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப் பிரிவு 126–இன் கீழ், பின்வரும் விதிமுறைகள் செயலில் இருக்கும்.

தேர்தல் தொடர்பான எந்தவொரு பொதுக்கூட்டத்தையோ, ஊர்வலத்தையோ யாரும் ஒருங்கிணைக்கவோ, நடத்தவோ அல்லது அவற்றில் பங்கேற்கவோ கூடாது. எந்தவொரு தேர்தல் விவகாரத்தையும், திரைப்படம், தொலைக்காட்சி, எஃப்.எம். ரேடியோ, வாட்ஸ்ஆப், முகநூல், எக்ஸ் தளம் போன்ற ஊடகங்கள் மூலம் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கக் கூடாது. குறுஞ்செய்தி மற்றும் இணையம் உள்பட அனைத்து மின்னணு வடிவிலான தகவல் தொடர்பையும் இது உள்ளடக்கும். பொதுமக்களில் எந்தவொரு நபரையும் ஈர்க்கும் வகையில், இசை நிகழ்ச்சி அல்லது திரையரங்கச் செயல்பாடு அல்லது எவ்வித கேளிக்கை அல்லது பொழுதுபோக்கு நிகழ்ச்சியை நடத்த அல்லது ஏற்பாடு செய்வதன் மூலம் அங்குள்ள பொதுமக்களிடம் தேர்தல் பரப்புரை செய்யக் கூடாது.

இந்த விதிமுறைகள் எவ்விதத்தில் மீறப்பட்டாலும் 1951– ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்பிரிவு 126 (2)–இன்படி, 2 ஆண்டுகள் சிறை அல்லது அபராதம் அல்லது இந்த இரண்டும் சேர்த்து தண்டனையாக விதிக்கப்படும்.

தொகுதிக்கு வெளியே இருந்து அழைத்து வரப்பட்ட அனைத்து அரசியல்கட்சி நிர்வாகிகள், கட்சிப் பணியாளர்கள் மற்றும் அந்தத் தொகுதியின் வாக்காளர்கள் அல்லாதோர் ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு மேல் அந்தத் தொகுதியைவிட்டு வெளியேற வேண்டும். திருமண மண்டபம், சமுதாயக்கூடம், தங்கும் விடுதிகள், விருந்தினர் இல்லம் ஆகிய இடங்களில் வெளிநபர்கள் யாரேனும் தங்கியுள்ளனரா என்பது கண்டறியப்படும்.

வேட்பாளர்களுக்கு வழங்கப்பட்ட நட்சத்திர பேச்சாளர்கள் உள்பட வாகன அனுமதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி முதல் செயல்திறனற்றாகிவிடும். தேர்தலுக்கான ஒவ்வொரு வேட்பாளருக்கும் வாக்குப் பதிவு நாளில் அவரது சொந்தப் பயன்பாட்டுக்கான ஒரு வாகனம், தேர்தல் முகவரின் பயன்பாட்டுக்கான தொகுதிக்கு ஒரு வாகனம் மற்றும் தேர்தல் முகவர் அல்லது அவரது பணியாளர்கள் பயன்பாட்டுக்கான ஒரு வாகனம் ஆகியவற்றுக்கு மட்டுமே தேர்தல் நடத்தும் அதிகாரி அனுமதி அளிப்பார்.

வாக்காளர்களை வாக்குச்சாவடிக்கு அழைத்து வருவதற்கும், வாக்குச்சாவடிகளிலிருந்து அழைத்துச் செல்வதற்கும் வாகனத்தை பயன்படுத்துவதற்கு எந்தவொரு வேட்பாளரும் அனுமதிக்கக் கூடாது. இது 1951–ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 133–ஆம் பிரிவின் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய முறைகேடான செயலாகும் எனத் தெரிவித்துள்ளார் அவர்.

# அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரனுக்கு உற்சாக வரவேற்பு!



திருப்பூர், அக். 04–

திருப்பூர் தாராபுரம் இடைத்தேர்தலில் அதிமுக சார்பில் போட்டியிடும் பானுமதி அவர்களை ஆதரித்து அம்மா மக்கள் முன்னேற்றக் கழக கழக பொதுச் செயலாளர் திரு டிடிவி தினகரன் அவர்கள் தாராபுரத்தில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார் அப்போது அவருக்கு திருப்பூர் மாநகர் மாவட்ட செயலாளர் இறை ஆர் வெங்கடேஷ் தலைமையில் வெற்றிவேல் வழங்கப்பட்டது உடன் மாநில சிறுபான்மை பிரிவு துணை செயலாளர் ஜான். மாவட்ட துணைச் செயலாளர் சுரேஷ்.இணை செயலாளர் கீதா ராணி, நிர்வாகிகள் நாகேந்திர குமார்.சுதாகர்,சதிஷ், கார்த்தி,சுரேந்தர்,ஜெய்கணேஷ்,தேவராஜ், செந்தில்,மேகலா.அன்பரசு. சாகுல்ஹமீது,குமணன், சீமான். அனிதா,மெர்லின். ஹாஜிரா பானு. ஆனந்தகிருஷ்ணன்.சுப்பிரமணி. விக்ரம்.தினேஷ்.சுதாகர்.மணிகண்டன் .நட்ராஜ். உள்ளிட்டமாநில மாவட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர் முன்னதாக திருப்பூரில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட நிர்வாகிகளுடன் ஊர்வலமாக பிரச்சாரம் நடைபெறும் இடத்திற்கு வருகை தந்தனர்.

# ராமநாதபுரத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான இறகுப்பந்து போட்டி!



ராமநாதபுரம், அக். 04–

ராமநாதபுரம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உள் விளையாட்டு அரங்கில், முதல்வர் கோப்பைக்கான மாற்றுத்திறனாளிகளுக்கான இறகுப்பந்து போட்டி நடைபெற்றது.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ஹரிகரன் முதலிடமும், முனீஸ் குமார் இரண்டாமிடமும், சையது அப்துல் ரகுமான் மூன்றாமிடமும் பெற்றனர். இரட்டையர் பிரிவில் ஹரிகரன் முனீஸ் குமார் ஜோடி முதலிடம் பெற்றது.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் ராஜேஸ்வரி முதலிடமும், மகாலட்சுமி இரண்டாமிடமும், பாதம் பிரியாள் மூன்றாமிடமும் பெற்றனர். இரட்டையர் பிரிவில் ராஜேஸ்வரிஆனந்தி ஜோடி முதலிடம் பெற்றது.

வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட விளையாட்டு அலுவலர் தினேஷ் குமார், பயிற்சியாளர் ரஞ்சித் குமார் உள்ளிட்டோர் பதக்கங்களையும் சான்றிதழ்களையும் வழங்கினர். போட்டியை மாவட்ட இறகுப்பந்து கழக நிர்வாகிகள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் சிறப்பாக நடத்தினர்.

# மு.க.ஸ்டாலினை சாடிய தவெக!



சென்னை, அக். 04–

தவெக ஐடி விங் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:–

Property comedy செய்து மதுரை முத்துவின் compet–itor ஆன தோல்வித் தலைவர் அவர்களே!.. காலம் காலமாய் கட்டுமரக் கதைகளால் கட்டமைத்த போலிப் பிம்பம் உடைந்து போனதில் பதற்றம் குறையவில்லையா? காணொளி வெளியிட்டு விளக்கமளித்தது போதாதென்று, மேடைக்கு மேடை மிசா கைதுக் குறித்து ஒப்பாரி வைக்கிறீர்களே தவிர, detention copy–ஐ மட்டும்காட்ட மறுக்கிறீர்களே?

ஆபாசத்தையும் அவதூறையும் ஆராதிக்கும் கோமாளிக் கூட்டத்தின் தலைவரே! Party fund, ஊழல் என்றால் மட்டும் ஏன் பதறி சட்டமன்றத்தை விட்டு ஓட்டமெடுக்கிறார்கள் திமுக உறுப்பினர்கள்?. அப்பாவின் பேனாவிற்கு சிலை வைக்கத் துடித்தது யாருடைய அப்பா வீட்டுப் பணமோ என்பதற்காகவா? வான்கோழி என்ற காவியத்தின் புகழைப் பரப்புவதற்காகவா? வாயைத் திறங்க, ஊழல் இலக்கியமே!

ரீல்ஸ் ஆட்சி என்று ரீல்ஸ் போட்டு புலம்பும் ஊழல் பீரோ மன்னனே! உங்களின் ஆபாசநதி, வன்மநதி – குடும்பச் சொத்து நள்ளிரவில் இன்ஸ்டாவில் உலா வருவது எதற்கென, அடுத்து நிகழ்த்தவிருக்கும் ஒன்றுமில்லாத உரையில் விளக்கமளிக்க மறவாதீர்கள். ரீல்ஸ் காணொளி வெளியிட்டு விளக்கமளித்தாலும் மகிழ்ச்சியே!

"எங்களை ஒரு பொருட்டாகக் கூட மதிக்கவில்லை" என்று வெட்டி வசனம் பேசிவிட்டு, வெற்றித் தலைவரின் உடை, ramp walk, எங்கள் தோழர்கள் அன்பாய்த் துண்டு வீசுகிறார்களென உபி கோமாளிக் கூட்டத்தைத் துண்டு வீசச் சொன்னது என அனைத்தையும் Copy–Paste செய்த Copy–Paste பண்ணையாரே! பெரியாரின் பெயரைச் சொல்லிக் கொண்டு பெண்களைத் தொடர்ந்து இழிவாகவும் ஆபாசமாகவும் பேசும் ஆபாசக் கும்பலின் தலைமையே! You continue...

பெண்களும், குழந்தைகளும், மக்களும் அனைத்தையும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். வரும் தேர்தலிலும் இனி உங்களுக்குத் தக்கப் பாடம் புகட்டிக் கொண்டே இருப்பார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# முன்னாள் எம்எல்ஏ முருகுமாறன் அதிமுகவிலிருந்து விலகல்!



சென்னை, அக். 04–

அதிமுக முன்னாள் எம்.எல்.ஏ. முருகுமாறன் விலகுவதாக இன்று அறிவித்துள்ளார். "இன்றைய தலைமையை நம்பி கெட்டவர்கள் பலர் உண்டு. அவர்களில் நானும் ஒருவன். இன்று கோடிகளை கொண்டவர்களே வேட்பாளர்கள் என தேர்வு செய்ததால் தமிழகத்தில் மூன்றாவது கட்சியாக கடை கோடியில் நமது கழகம் உள்ளது. உழைத்தவர்களை விட்டுவிட்டு கிடைத்தவர்களை வைத்துக் கொண்டு அரசியல் செய்தால் களத்தில் வெற்றி பெறமுடியாது, இனி நமது கழகத்தில் கோடிகள் இல்லாத கொள்கை உரம் கொண்ட ஏழை எளியவர்கள்,வறியவர்கள், உண்மையாக உழைப்பவர்கள் அரசியல் அதிகாரம் பெற முடியாது. தமிழகத்தை மீட்போம் 2026 நிகழ்வில் காட்டுமன்னார்கோயில் தொகுதியில் என்னை முன்நிலைபடுத்தி, நம்பிக்கை ஊட்டி இரவு பகலாக வேலைகளை வாங்கிக் கொண்டு 2026 சட்டமன்ற தேர்தல் களத்தில் 100% வெற்றி பெறக்கூடிய எனது சொந்த தொகுதியான காட்டுமன்னார்கோயில் தொகுதியை எனக்கு ஒதுக்காமல் தலைமை செய்த துரோகத்தை என் நெஞ்சம் மறக்க மறுக்கிறது.

மாணவப் பருவம் முதல் நகமும் சதையுமாக உடலும் உயிருமாக பயணித்து பணியாற்றிய இப்பேரியக்கத்தில் இருந்து விலக்கி கொள்ள வேண்டிய சூழ்நிலையை தலைமை எனக்கு ஏற்படுத்திய நிலையை எண்ணி மனம் வலிக்கின்றது. "அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்னை வளர்த்த கட்சி" "நான் வளர்த்த கட்சி" என்ற நினைவுகள் என்றும் என் மனதில் நிலைத்து நிற்கும்." என கூறியுள்ளார்.

# வேலை வாய்ப்பு

## சென்னை பெட்ரோலிய நிறுவனத்தில் காலியிடங்கள்!



சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் (CPCL) நிறுவனத்தில் ஓராண்டு தொழிற்பழகுநர் பயிற்சிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. டிரேடு, பட்டதாரி மற்றும் டெக்னீசியன் அப்ரண்டிஸ் பிரிவுகளுக்கு ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம். பயிற்சி இடம்: சென்னை.

விண்ணப்பிக்க கடைசி நாள்: 12.10.2026

இணையதளம்: www.cpcl.co.in



திருப்பூர் தெற்கத்தியான் குலத்தின் . பிரதிக் ஷா, 10–ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் பாண்டிய வேளாளர் சமூக அளவில் முதலிடம் பெற்று, சமூகப் பெரியோர்களின் கரங்களால் பாராட்டு விருதும் கேடயமும் பெற்றுள்ளார் அவருக்கு பழனி பாண்டிய வேளாளர் மடம் துணைச் செயலாளர் எம் அய்யனார். தெற்கத்தியான்குல பங்காளிகள் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் பாண்டிய வேளாளர் சமூக பொதுமக்கள். வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

# வானில் அபூர்வ நிகழ்வு: பிரகாசமாக காட்சி தரும் 'சனிக்கிரகம்'!



பூமி, சூரியனுக்கும், சனிக்கிரகத்துக்கும் நேர் நடுவே வரும்போது வானில் அபூர்வ நிகழ்வு ஏற்படுகிறது. இந்த நிகழ்வு இன்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறுவதால் சனிக்கிரகத்தை மிகத்தெளிவாகவும், பிரகாசமாகவும் பார்க்க முடியும்.

வெறும் கண்ணால் பார்க்கும்போது இது ஒரு பிரகாசமான புள்ளி போல மட்டுமே தெரியும். ஆனால், சாதாரண சிறிய தொலைநோக்கி (அதாவது டெலஸ்கோப்) மூலம் பார்த்தால் சனியின் புகழ்பெற்ற வளையங்களை காண முடியும். சூரியன் மறையும் நேரத்தில் உதித்து, சூரிய உதயம் வரை இது தெரியும்.

பூமி ஆண்டுக்கு ஒருமுறை சூரியனைச் சுற்றி வருகிறது. ஆனால் சனி ஒருமுறை சூரியனைச் சுற்றிவர 29.5 ஆண்டுகள் ஆகும். பூமியின் சுற்றுப்பாதை சிறியது. அது சனியை விட வேகமாக நகர்கிறது. ஆண்டுக்கு ஒருமுறை, பூமி சனிக்கும் சூரியனுக்கும் இடையில் கடந்து செல்கிறது. வானியலாளர்கள் இதை 'எதிர்நிலை' என்று அழைக்கி றார்கள். சனிக்கிரகத்தைக் காண்பதற்கு, இந்த ஆண்டின் சிறந்த வாய்ப்புகளில் ஒன்றாக இன்று அமையும். சனிக்கிரகம் எதிர்நிலை 378 நாட்களுக்கு ஒருமுறை நிகழ்கிறது.

இதற்கு முந்தைய நிகழ்வு கடந்த 2025–ம் ஆண்டு செப்டம்பர் 21–ந்தேதி நடந்தது. அடுத்த நிகழ்வு 2027–ம் ஆண்டு அக்டோபர் 16–ந்தேதி அன்று நடைபெறும். எதிர்நிலை என்பது சனிக்கு மட்டும் உரியதல்ல.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881







## இன்றைய கார்ட்டூன்

### கடன் சுமை... பதவிக்குக் கத்தரி!




# ‘114 ரபேல் விமானங்கள் வாங்க விரைவில் ஒப்பந்தம் இறுதி செய்யப்படும்’ - விமானப்படை தளபதி தகவல்!

புதுடெல்லி, அக். 04–

1932–ல் இந்திய விமானப்படை (IAF) அதிகாரப்பூர்வமாக நிறுவப்பட்டதை நினைவுகூரும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 8–ந்தேதி இந்திய விமானப்படை தினமாகக் கொண்டாடப்படுகிறது. இதனை முன்னிட்டு, விமானப்படை தளபதி ஏ.பி.சிங் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:–



“இந்திய விமானப்படைக்கு பிரான்ஸ் நாட்டிடம் இருந்து 114 ரபேல் போர் விமானங்கள் வாங்கும் நீண்டகால திட்டத்துக்கு கடந்த பிப்ரவரி மாதம் மத்திய அரசு ஒப்புதல் அளித்தது. அனைத்து விஷயங்களும் திட்டமிட்டபடி நடந்தால், நடப்பு நிதியாண்டிலேயே அந்த ஒப்பந்தம் இறுதி செய்யப்படும். விமானத்தின் விலை மற்றும் இதர முக்கிய விஷயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

அடுத்த சில ஆண்டுகளில், ஆண்டுக்கு 35 முதல் 40 போர் விமானங்கள், இந்திய விமானப்படைக்கு தேவைப்படும். செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தி, விமானப்படை பலத்தை பெருக்க வேண்டும். ரஷியா Su–57 ரக விமானங்களை வழங்க முன்வந்தது. ஆனால் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.”

இவ்வாறு அவர் கூறினார்.

# ‘இடைத்தேர்தலில் த.வெ.க. வரலாற்று வெற்றியைப் பெறும்’ - அமைச்சர் செங்கோட்டையன்!

திருச்சி, அக். 04–

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் (தனி) சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் நாளை மறுநாள் (செவ்வாய்க்கிழமை) நடைபெற உள்ளது.

இதனை முன்னிட்டு, இறுதி கட்ட பிரசாரத்திற்காக தாராபுரம் தொகுதியில் போட்டியிடும் த.வெ.க. வேட்பாளர் சத்யபாமாவை ஆதரித்து தாராபுரத்தில் முதல்–அமைச்சர் விஜய் இன்று ‘ரோடு ஷோ’ மேற்கொள்கிறார்.

இந்நிலையில், முதல்–அமைச்சரின் பிரசாரம் குறித்து திருச்சியில் இன்று செய்தியாளர்களை சந்தித்தபோது அமைச்சர் செங்கோட்டையன் கூறியதாவது;–



“தமிழ்நாட்டை நேர்வழியில் எடுத்துச் செல்லக்கூடிய, ஊழலற்ற ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் முதல்–அமைச்சர் விஜய், இன்று தாராபுரத்தில் தேர்தல் பிரசாரத்திற்காக ‘ரோடு ஷோ’ நடத்த உள்ளார். அவரை காண்பதற்காக மக்கள் துடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இடைத்தேர்தலில் த.வெ.க. பெறும் வெற்றியானது, தமிழகத்தின் வரலாற்றில் இடம்பெறக்கூடிய வரலாற்று வெற்றியாக அமையும். மற்ற தேர்தல்களை காட்டிலும் இந்த தேர்தல் ஒரு திருப்புமுனையை உருவாக்கும். அடுத்த இடைத்தேர்தலில் தி.மு.க.வோ, அ.தி.மு.க.வோ போட்டியிடாத அளவிற்கு த.வெ.க. வெற்றி வாகை சூடும்.”

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# நான்கு மாதங்களில் நான்கு நல்ல திட்டங்கள்; முதல்வர் விஜய்!

சென்னை, அக். 04–

நான்கு மாதங்களில் நான்கு நல்ல திட்டங்கள் மக்களுக்கு வழங்கி உள்ளதாக முதல்வர் விஜய் தெரிவித்துள்ளார்.




சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப் படை (ஜூன் 9ம் தேதி 2026), காமராஜர் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம் (செப்டம்பர் 22ம் தேதி 2026), தாய்மாமன் தங்க மோதிரத் திட்டம் (செப்டம்பர் 28ம் தேதி, 2026), வெற்றி பயணத்திட்டம் (அக்டோபர் 2ம் தேதி, 2026) ஆகிய நான்கு நல்ல திட்டங்கள் மக்களுக்கு வழங்கி உள்ளதாக முதல்வர் விஜய் வீடியோவை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டு பதிவில், “நான்கே மாதங்களில் நனிசிறக்கும் நான்கு திட்டங்கள்; மக்களுக்காக... மக்களுடன்...”! என குறிப்பிட்டுள்ளார்.

# எங்களை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை என்றால், SOP ஏன் கொண்டு வந்தீர்கள்? மு.க.ஸ்டாலினுக்கு அமைச்சர் ராஜ்மோகன் பதிலடி!

சென்னை, அக். 04–

மதுராந்தகத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் பேசிய திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், தவெக குறித்தும் அதன் தலைமை குறித்தும் பல்வேறு விமர்சனங்களை முன்வைத்தார். மு.க.ஸ்டாலினின் இந்த விமர்சனங்களுக்கு, தவெக அமைச்சர் ராஜ்மோகன் எக்ஸ்தள பதிவில் கூறியிருப்பதாவது:



‘தோல்வித் தலைவர்’ ஸ்டாலின் எங்களைப் பார்த்து ‘கோமாளிகள்’ என்று நீங்கள் சொல்வதைக் கேட்டு சிரிப்புத்தான் வருகிறது. திமுக தலைமையின் செயல்பாடுகளைச் சுட்டிக்காட்டி கேள்விகளை எழுப்பியுள்ள ராஜ்மோகன், தமிழக வெற்றிக் கழகத்தை ஒரு பொருட்டாகவே நீங்கள் மதிக்கவில்லை என்றால், எங்கள் செய்திகளை இருட்டடிப்பு செய்யச் சொல்லி ஊடகங்களுக்கு ஏன் உத்தரவிட்டீர்கள்? ஊடகங்களுக்குக் கட்டளை இடுவதும், YouTube முகப்புப் படங்களில் (Thumbnails) கூட கட்டுப்பாடுகளை விதிப்பதும் ஏன்? தினந்தோறும் என்ன தலைப்பு எடுக்க வேண்டும் என்று கட்டளையிட்டீர்கள்? யூடியூபில் கூட வெற்றித் தலைவரைப் புகழக் கூடாது என்று அடம் பிடித்தீர்கள்? மாதந்தோறும் பேனா மூலம் கருத்துக்கணிப்பு நடத்திப் பயந்தீர்கள்? இதற்குத்தானா SOP (நிலையான வழிகாட்டு நடைமுறைகள்) கொண்டு வந்தீர்கள்?”

மேலும், விளம்பர பாணிகளை கேலி செய்யும் விதமாக, வெற்றித் தலைவர் போல ஆடை உடுத்துவது, வெற்றி தலைவர் ‘ராம்ப் வாக்’ போனால், அதை பார்த்து நீங்கள் ‘பாம்பு வாக்’ போனீர்கள்? வெற்றித் தொண்டன் அன்பாய் துண்டு வீசினால், உ.பி.களிடம் நீங்கள் துண்டால் அடி வாங்கினீர்கள்? என்றும் ராஜ்மோகன் கேள்வி எழுப்பியுள்ளார். அதோடு, பிரபல நகைச்சுவை பாணியில், அந்த கரடி பொம்மை என்ன விலை? சார்... அது கண்ணாடி சார்! என்ற உரையாடலையும் மேற்கோள் காட்டி நகைச்சுவையாக விமர்சித்துள்ளார்.

மதுராந்தகத்தில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் பேசிய பேச்சுக்கு, அமைச்சர் ராஜ்மோகன் சமூக வலைதளங்களில் பதிலடி கொடுத்துள்ள சம்பவம், தவெக–திமுக ஆதரவாளர்களிடையே சமூக வலைதளங்களில் பெரும் விவாதப் பொருளாக மாறியுள்ளதுடன், தேர்தல் களத்திலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# வீடுகளில் சோலார் பேனல் அமைக்க ஆர்வம்: தமிழகத்தில் 10 நாட்களில் 16,500 பேர் விண்ணப்பம்!

சென்னை, அக். 04–

வீடுகளில் சூரிய மின்சக்தியை ஊக்குவிக்க வீடுகள்தோறும் சூரிய மின்சக்தி திட்டத்தை கடந்த 2024–ம் ஆண்டு பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தில் வீடுகளின் மேற்கூரைகளில் சூரிய மின்சக்தி அமைக்க மத்திய அரசு சார்பில் மானியம் வழங்கப்படுகிறது. தொடர்ந்து, சூரிய மின்சக்தியை ஊக்குவிக்க மாநில அரசு சார்பிலும் மானியம் வழங்கப்படும் என்று கடந்த மாதம் (செப்டம்பர்) 21–ந்தேதி அறிவிக்கப்பட்டது. இதன்படி, ஒரு கிலோவாட் மின்சார உற்பத்தித்திறனுக்கு மத்திய அரசு ரூ.30 ஆயிரம், மாநில அரசு ரூ.5 ஆயிரம் என அதிகபட்சம் ரூ.35 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது.

இதேபோல் 2 கிலோவாட் மின்சார உற்பத்தித்திறனுக்கு மத்திய அரசு ரூ.60 ஆயிரமும், மாநில அரசு ரூ.10 ஆயிரம் என அதிகபட்சம் ரூ.70 ஆயிரம் வழங்கப்படுகிறது.

3 கிலோவாட் மின்சார உற்பத்தித்திறனுக்கு மேலே இருந்தால் மத்திய அரசு அதிகபட்சமாக ரூ.78 ஆயிரம், மாநில அரசு ரூ.22 ஆயிரம் என அதிகபட்சமாக ரூ.1 லட்சம் வரையில் வழங்கப்படுகிறது.

சூரிய மின்சக்திக்கு மத்திய, மாநில அரசுகள் மானியத் தொகை வழங்குவதையடுத்து, மக்களிடையே நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. இந்தநிலையில் சூரிய மின்சக்திக்கு மானியம் வழங்கப்படும் என மாநில அரசு அறிவித்த 10 நாட்களி லேயே, வீடுகளின் மேற்கூரைகளில் சூரிய மின்சக்தி அமைக்க 16 ஆயிரத்து 500 பேர் விண்ணப்பித்து உள்ளனர்.



https://www.tnebltd.gov.in/usrp/ இந்த இணையதள வாயிலாக விண்ணப்பித்துக்கொள்ள முடியும் என்று எரிசக்தி துறை அதிகாரிகள் கூறினர்.



பழம்பெரும் இயக்குநர் சிங்கீதம் சீனிவாச ராவ் உடலுக்கு நடிகர் கமல்ஹாசன் நேரில் அஞ்சலி செலுத்தினார்.

# வருகிறது செலவு குறைப்பு நடவடிக்கை: அனைத்து துறைகளும் அரசு மறுசீரமைப்பு!

சென்னை, அக். 04–

செலவு குறைப்பு நடவடிக்கையாக, அனைத்து துறைகளிலும் உயரதிகாரிகளின் பதவிகளை குறைப்பது, அவசியமில்லாத பணியிடங்கள் ரத்து உள்ளிட்ட சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள, தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

தமிழக அரசின் மொத்த கடன், 10 லட்சம் கோடி ரூபாயாக உள்ளது. சொந்த வரி வருவாய், வரி அல்லாத வருவாய், மத்திய அரசின் மானியங்கள் போன்றவை வாயிலாக, அரசுக்கு வருவாய் கிடைக்கிறது.

நடப்பு நிதியாண்டில் மொத்த வருவாயாக, 3.50 லட்சம் கோடி ரூபாய் கிடைக்கும் எனவும், மொத்த செலவு, 4.05 லட்சம் கோடி ரூபாயாக இருக்கும் எனவும் மதிப்பிடப்பட்டு உள்ளது. இதில் பணியாளர்களுக்கான சம்பள செலவு, 77,310 கோடி ரூபாயும், கடன்களுக்கான வட்டியின் பங்கு, 76,452 கோடி ரூபாயாகவும், மானியங்கள் பங்கு, 1.72 லட்சம் கோடி ரூபாயாகவும் இருக்கும் என, கணக்கிடப்பட்டுள்ளது.



த.வெ.க., ஆட்சி அமைந்த நிலையில், 500 யூனிட் வரை மின்சாரம் பயன்படுத்தும் வீடுகளுக்கு, 200 யூனிட் இலவச மின்சாரம், தாய்மாமன் தங்க மோதிர திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு உள்ளன.

மகளிருக்கு ஆண்டுக்கு, 3 இலவச சிலிண்டர் வழங்கும் திட்டம், பொங்கல் முதல் தொடங்கப்பட உள்ளது. மகளிருக்கு மாதம், 2,500 ரூபாய் வழங்கப்பட உள்ளதாக, அக்கட்சி தேர்தல் வாக்குறுதி அளித்துள்ளது. இவற்றுக்காக அரசுக்கு அதிக நிதி தேவைப்படுகிறது.

எனவே, வருவாயை அதிகரிக்க, ‘டாஸ்மாக்’ கடைகளில் மது விற்பனை, கனிமங்கள் விற்பனையில் முறைகேடு தடுப்பு உள்ளிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. செலவு குறைப்பு நடவடிக்கையாக, கடந்த ஆட்சியில் அறிவிக்கப்பட்ட, பல திட்டங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

அதில், மற்றொரு அம்சமாக, அனைத்து துறைகளும் சீரமைக்கப்பட உள்ளன. அதன்படி, ஒவ்வொரு துறையிலும் அதிகளவில் உள்ள உயரதிகாரிகளின் பணியிடங்களை குறைப்பது, அவசியம் இல்லாத பணியிடங்கள் ரத்து உள்ளிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன. வணிக வரி துறையில் கூடுதல் ஆணையர்கள், இணை ஆணையர்கள் பணியிடங்களை குறைக்க, அரசு முடிவு செய்துள்ளது. இதேபோல், பல துறைகளில் பணியிடங்களில் அவசியம், அவசியமில்லாத விபரங்கள் கணக்கெடுக்கப்பட்டு வருகின்றன.




பழனிக்கு வந்த ஹைதராபாத் டு செங்கோட்டை இடையிலான வாராந்திர ரயிலை பழனி ரயில்வே உபயோகிப்போர் நல சங்கத்தினர் வரவேற்றனர் இதில் ரயில்வே அதிகாரிகளுக்கும் ஓட்டுனர்களுக்கும் பொன்னாடை போர்த்தினர்.

# எல்லை தாண்டி மீன் பிடித்ததாக குற்றச்சாட்டு: நெடுந்தீவு அருகே 9 தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை கடற்படையால் சிறைபிடிப்பு!

ராமேஸ்வரம், அக். 04–

மீனவர்கள் சிறைபிடிக்கப்பட்ட செய்தி ராமேஸ்வரம், தங்கச்சிமடம் உள்ளிட்ட கடலோரப் பகுதிகளில் பரவியதை அடுத்து, மீனவர்களின் குடும்பத்தினரும் அப்பகுதி மக்களும் பெரும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்துள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் மற்றும் தங்கச்சிமடம் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் வழக்கம்போல் மீன்பிடி அனுமதிச் சீட்டு பெற்று கடலுக்குச் சென்றனர். பாரம்பரிய எல்லைப் பகுதியான பாக் ஜலசந்தி கடற்பரப்பில் நெடுந்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, அப்பகுதிக்கு ரோந்துப் படகுகளில் வந்த இலங்கை கடற்படையினர் மீனவர்களைச் சுற்றி வளைத்தனர். எல்லை தாண்டி மீன்பிடித்ததாகக் கூறி, தங்கச்சிமடத்தைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமான விசைப்படகையும் அதில் இருந்த 9 மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் அதிரடியாகச் சிறைபிடித்தனர்.



சிறைபிடிக்கப்பட்ட 9 மீனவர்களையும் அவர்களது விசைப்படகையும் பறிமுதல் செய்த இலங்கை கடற்படையினர், உடனடியாக நெடுந்தீவு கடற்படை முகாமிற்கு அழைத்துச் சென்று விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். சட்டப்பூர்வ நடவடிக்கைக்காக அவர்களை இலங்கை மீன்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்து, மயிலாட்டி அல்லது தலைமன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த இலங்கை கடற்படை திட்டமிட்டுள்ளது.

மீனவர்கள் சிறைபிடிக்கப்பட்ட செய்தி ராமேஸ்வரம், தங்கச்சிமடம் உள்ளிட்ட கடலோரப் பகுதிகளில் பரவியதை அடுத்து, மீனவர்களின் குடும்பத்தினரும் அப்பகுதி மக்களும் பெரும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்துள்ளனர். வாழ்வாதாரத்திற்காக கடலுக்குச் செல்லும் மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தொடர்ந்து நடத்தி வரும் கைது நடவடிக்கைகளுக்கும் அத்துமீறல்களுக்கும் எதிராகக் கண்டனக் குரல்கள் வலுத்து வருகின்றன. இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டு மீனவர்களையும், பறிமுதல் செய்யப்பட்ட அவர்களின் விலைமதிப்பற்ற விசைப்படகுகளையும் விரைந்து மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீனவர் சங்க பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர். இந்திய அரசு இலங்கை அரசுடன் தூதரக ரீதியாகத் தொடர்பு கொண்டு, எல்லைப் பகுதியில் மீனவர்கள் சந்திக்கும் இந்த சிக்கலுக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020